ADFACTORS PR
Knowledge-driven communications

| Published Date: | 29 Nov 2018 | Publication: | Dina Bhoomi (Tamil) |
|---|---|---|---|
| Edition: | Coimbatore | Page No: | 2 |
| MAV/CCM: | 80268/133.78 | Circulation: | 16000 |

# கோத்தகிரி செயின் ஜூட்ஸ் பள்ளி, டிசிஎஸ் ஐடி விஸ் போட்டியில் 2ம் பிடித்து சாதனை




**கோவை, நவ.28** – டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் இந்தியாவின் பள்ளிகளுக்கிடையேயான மாபெரும் தகவல் தொழில்நுட்ப வினாடி வினா போட்டியான டிசிஎஸ் ஐடி விஸ் 2018 போட்டியில் தேசிய அளவில் வெற்றி பெற்றவர்கள் குறித்த தகவல்களை வெளியிட்ட்து. நவம்பர் 25-ம் தேதி மும்பையில் இருக்கும் விவாந்தா தாஜ் பிரசிடெண்ட் ஹோட்டலில் நடைப்பெற்ற மாபெரும் இறுதிப்போட்டியில் கோத்தகிரியின் செயிண்ட் ஜூட்ஸ் பள்ளியைச் சேர்ந்த யாழினி சண்முகம் மற்றும் ஹர்ஷ் அகர்வால் ஆகியோர் இரண்டாம்யிடத்தை வென்றதோடு, 100,000 மதிப்புள்ள டிஜிட்டல் ஷாப்பிங்குக்கான

இ-வவுச்சர்கள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் பள்ளிக்கான கேடயம் ஆகியவற்றை பரிசாகப் பெற்றனர். அதேநேரம் வதோராவைச் சேர்ந்த செயிண்ட் கபீர் பள்ளியின் பாவ்யா ரானிங்க மற்றும் நிஹ ார் ஷா ஆகியோர் டிசிஎஸ் ஐடி விஸ் 2018 போட்டியின் சேம்பியன்ஷிப்பை வென்றனர். இவர்களுக்கு டிஜிட்டல் ஷாப்பிங்குக்கான 150000 மதிப்புள்ள் இ-வவுச்சர்கள், தங்கப்பதக்கம் மற்றும் பள்ளிக்கான சேம்பியன்ஷிப் கேடயம் ஆகியவற்றையும் பெற்றனர். ''இந்தியாவில் இருக்கும் மாணவர்கள், புதிய நவீன தொழில்நுட்பங்களைப் புரிந்து கொண்டு அவற்றை பின்பற்றி வருவதைப் பார்க்கும் போது உற்சாகமாக இருக்கிறது. இதுதான் தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் பாதை என்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவை முன்னுக்கு கொண்டு வந்ததில் முக்கிய பங்கினை பிடித்திருக்கும் ஒரு தளமாகவும் இது விளங்குகிறது. இது மேலும் தொடர்ந்து இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உதவியாக அமையும். அதற்கான ஒரு சூழலை தற்போது நான் இங்கே மாணவர்களிடையே பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்போட்டியில் வெற்றிப் பெற்ற, கலந்து கொண்ட அனைவரையும் நான் பாராட்டுகிறேன். ஐடி விஸ் 2018 போட்டியை ஒரு மாபெரும் போட்டியாக வெற்றிப் பெற செய்த அனைத்து போட்டி குழுவினருக்கும் எனது வாழ்த்துகள்'' என்றார் தேசிய அளவிலான டிசிஎஸ் ஐடி விஸ் 2018 போட்டியின் மாபெரும் இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட டிசிஎஸ்-ன் தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் கோபிநாதன். மேலும் போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார் ராஜேஷ் கோபிநாதன். தேசிய அளவிலான இறுதிப்போட்டியில், ஆறு அணிகள் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும், கலந்து கொண்டன. இந்தியா முழுவதிலும் 12 நகரங்களில் நடைப்பெற்ற 2 அரையிறுதிப்போட்டிகளின் மூலம் இவ்வணிகள் சேம்பியன்ஷிப் பட்டத்திற்க்கான இறுதிப்போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த வினாடி-வினா போட்டியானது, 'ரியல் டைம் ஸ்கோரிங்' என்ற முறையில் நடைப்பெற்றதால் மிகவும் பரபரப்பாகவும், சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் கவனத்தை ஈர்த்தன. 'பிக்ப்ரெய்ன்' என்று அழைக்கப்படும் கிரி பாலசுப்பிரமணியம், டிசிஎஸ் ஐடி விஸ் வினாடி வினாப் போட்டியின் க்விஸ் மாஸ்டராக செயல்பட்டார்.